[*2023 மார்ச் 28*

*அரசின்மூலம் கட்டப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி 10 கோரிக்கைகளில் ஒன்றாக, பேருந்து நிலையம் இல்லாமல் இருக்கின்ற பேரூராட்சிகளுக்கு பேருந்து நிலையங்கள் வேண்டுமென்ற கோரிக்கை வழங்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதுவரை பேருந்து நிலையங்கள் இல்லாமல் இருக்கும் பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, அங்கெல்லாம் பேருந்து நிலையம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் 490 பேரூராட்சிகள் இருக்கின்றன. அந்த 490 பேரூராட்சிகளில் 203 பேரூராட்சிகளில் மட்டும்தான் பேருந்து நிலையம் இருக்கிறது. சில பேரூராட்சிகளில் பேருந்து நிலையம் தேவைப்படாமல், சாலையிலேயே பேருந்து நின்று செல்லும்படி இருக்கிறது. கீழ்ப்பெண்ணாத்தூரில் தேவைப்படுமானால், நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மக்கள்தொகை அடிப்படையிலும், தினந்தோறும் வந்துசெல்லும் பயணிகளின் அடிப்படையிலும் அதற்கு முன்னுரிமை தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**52—**

## பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***15581—திரு. மு. சக்ரபாணி:**

*மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வானூர் தொகுதி, வானூர் ஒன்றியத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?*

*2023 மார்ச் 28]*

**மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*வானூர் தொகுதி அமைந்திருக்கும் விழுப்புரம் மாவட்டத்தில் ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் 6 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் வானூர் தொகுதி, வானூர் ஒன்றியத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி அவர்கள்.*

**திரு. மு. சக்ரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், கழகத்தின் பொதுச் செயலாளர், ஐயா எடப்பாடி அவர்களை வணங்குகிறேன்.*

*விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதியில் கலைக் கல்லூரியிலோ, பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரியிலோ சேர இயலாத 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு படித்த ஏழையெளிய விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் தொழிற்கல்வி பயில ஏதுவாக ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே ஓர் உறுப்பினர் கேட்ட கேள்விக்கு மிகத் தெளிவாக பதிலளித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நியாயமானதுதான். அந்தத் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி உருவாக்கப்பட்டு,*

அதற்கான கட்டடங்கள் கட்டுகின்ற பணிகூட இப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றபிறகு, அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பலவகை தொழில்நுட்பக் கல்லூரி குறித்து, நான் அன்றே சொன்னேன், பெரும்பாலும் மாணவர்கள் அங்கே சேர்வது இல்லை. இருந்தாலும்கூட, இந்த ஆண்டைப் பொறுத்தவரையில், குறிப்பாக, புதுமைப் பெண் திட்டத்தின் மூலமாக 1,000 ரூபாய் உதவித்தொகை கொடுத்ததற்குப் பிறகு, polytechnic–ல் சேர்கின்ற பெண்களுக்கும் உதவித் தொகை என்ற அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததன் காரணமாக, இந்த ஆண்டு 10,500 மாணவிகள் polytechnic–ல் சேர்ந்திருக்கிறார்கள். ஆகவே, இது வளர்ச்சிதான்.

இருந்தாலும், நீங்கள் கேட்பதைப்போல ஒரு பாலிடெக்னிக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், சுமார் 44.38 கோடி ரூபாய் செலவாகிறது. நாங்கள் நிதிநிலையைக்கூட பார்க்கவில்லை, ஆனால், அதில் சேரக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும், தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில்தான், தற்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தொழில் துறை 4.0 தரத்திற்கேற்ப அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளை 'திறன்மிகு மையங்களாக' மாற்றும் திட்டத்தை வரும் ஆண்டில் செயல்படுத்தவிருக்கிறார்கள். குறிப்பாக, 54 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள் 2,783 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திறன்மிகு மையங்களாகத் தரம் உயர்த்தப்படவிருக்கின்றன. ஆகவே, இவற்றையெல்லாம் செய்கிறபோது, அதில் சேர்கிற மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். குறிப்பாக, இந்த ஆண்டு 120 கோடி ரூபாய் செலவில், சென்னை அம்பத்தூரில் தமிழ்நாடு உலகளாவிய புதுமை முயற்சிகள் மற்றும் திறன் பயிற்சி மையம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, பொறியியல் கல்லூரி போன்றவற்றில் மாணவர்களின் சேர்க்கையை அதிகரிப்பதற்கான எல்லா முயற்சிகளும் நிச்சயமாக மேற்கொள்ளப்படும். நான் முன்பே சொன்னதைப்போல, நிதி மட்டும் இதற்குக் காரணம் அல்ல. மாணவர்களின் சேர்க்கை, தரம் ஆகியவற்றைப் பொறுத்துதான் இந்தக் கல்லூரிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*2023 மார்ச் 28]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி அவர்கள்.*

**திரு. மு. சக்ரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தில் 22 ஒன்றியங்கள் உள்ளன. விழுப்புரம் நகரத்தில் மட்டும் ஒரேயோர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி உள்ளது. 6 சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகளில், ஒன்றுகூட வானூர் தொகுதியில் இல்லை. எனவே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதால், வானூர் தொகுதியில் ஒரு* Polytechnic College *அமைத்துத் தர மறுபரிசீலனை செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விழுப்புரம் மாவட்டத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முன்னாள் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான், விழுப்புரம் மாவட்டம், அரகண்டநல்லூரில் அரசு பாலிடெக்னிக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. மேலும், 6 சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகள், அதாவது, ஏழுமலை பாலிடெக்னிக் கல்லூரி, விழுப்புரம், ராஜா தேசிங்கு பாலிடெக்னிக் கல்லூரி, விழுப்புரம், ஸ்ரீவெங்கடாசலபதி பாலிடெக்னிக் கல்லூரி, விழுப்புரம், பி.வி. பாலிடெக்னிக் கல்லூரி, பெலகுப்பம், சூர்யா பாலிடெக்னிக் கல்லூரி, விக்கிரவாண்டி, இ.எஸ். பாலிடெக்னிக் கல்லூரி, வழுதரெட்டி ஆகிய 6 இடங்களில் இருக்கின்றன. ஆக, இந்த பாலிடெக்னிக் கல்லூரிகளில் ஒதுக்கப்பட்டிருக்கிற மொத்த சேர்க்கை இடங்களின் எண்ணிக்கை 2,940. ஆனால், அதிலே சேர்ந்திருக்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 1,023 மட்டுமே. மீதமுள்ள 1,917 இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன.*

*ஆகவே, கடந்த காலங்களில் பாலிடெக்னிக்கில் சேர்கிற மாணவர்களுடைய எண்ணிக்கை குறைந்திருப்பதையொட்டிதான், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இதற்கென்று நல்ல சிறப்பான ஒரு திட்டத்தைக் கொடுக்க வேண்டுமென்று*

'நான் முதல்வன்' திட்டத்தையும், நான் ஏற்கெனவே சொன்னதுபோல், தொழிற்பயிற்சியை அதிகரிக்கும் வகையிலும் இந்த ஆண்டு 180 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். மாணாக்கர்களின் எண்ணிக்கை, பல்வேறு திட்டங்கள்மூலம் குறிப்பாக, புதுமைப் பெண் திட்டத்தின் மூலமாக 10,500 மாணவியர் பாலிடெக்னிக் கல்லூரிகளில் சேர்ந்திருக்கிறார்கள். ஆகவே, நான் முன்பே சொன்னதுபோல, வருகிற காலங்களில் நிதி மட்டுமல்ல, சேர்க்கையையும், தரத்தையும் உயர்த்த வேண்டுமென்ற அடிப்படையில்தான் இந்த பாலிடெக்னிக் கல்லூரிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

விழுப்புரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருக்கோவிலூரில் ஓர் அரசு கலைக் கல்லூரியைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, கல்வி வளர்ச்சியிலே நிச்சயமாக அந்த மாவட்டம் மேலும் சிறப்பாக வளரும் என்ற உறுதியை தங்களுக்கு எடுத்துச் சொல்லி, வருகிற காலங்களில் இதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

**திரு. ம. சிந்தனை செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை 'திறன்மிகு மையங்கள்' ஆக தரமுயர்த்துகிற இந்த அரிய முயற்சியை, மகத்தான முயற்சியை வரவேற்று, பாராட்டுகிற அதே தருணத்தில் காட்டுமன்னார்கோவில் தொகுதி, குமராட்சி ஒன்றியம், கூடுவெளிசாவடியில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. கடைகோடியில் இருக்கிற, விளிம்பில் இருக்கிற அந்தத் தொகுதியில் இருக்கிற இந்தப் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியை திறன்மிகு மையமாக மாற்றுகிற கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலிடெக்னிக் கல்லூரிகளில் பணியாற்றுகிற

*2023 மார்ச் 28*]

*ஆசிரியப் பெருமக்களின் திறனையும் வளர்க்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்திற்காக 180 கோடி ரூபாயை இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தக் கல்லூரியிலும் இதுபோன்ற அவசியம் இருக்குமானால், வருகின்ற காலங்களில் பரிசீலிக்கப்பட்டு, அதையும் நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**53—**

## கிராம நிருவாக அலுவலகக் கட்டடம்

***8577—திரு. கு. செல்வபெருந்தகை:**

*மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, ஏகனாபுரம் ஊராட்சியில் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, ஏகனாபுரம் ஊராட்சியில் கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்டுவது தொடர்பாக கருத்துரு அரசளவில் ஏதும் நிலுவையில் இல்லை. மேற்படி கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் கட்டுவது தொடர்பாக*